பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

31 05 2025 **SATURDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மாநில அரசுகளுக்கான வரிப் பகிர்வாக, கூடுதல் தவணையாக 86 ஆயிரத்து 735 கோடி ரூபாயை விடுவிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

2. வேளாண் விளைப்பொருட்கள் உற்பத்தி இதுவரை இல்லாத அளவிற்கு அதிகரித்துள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தங்க நகைக்கடன் தொடர்பான ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டுதல்களில் மாற்றம் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

4. தமிழகத்தில் கோவிட் பரவல் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று மாநில அரசு கேட்டுக்கொண்டுள்ளது.

5. உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

<u>*--- இனி விரிவான செய்திகள் ---*</u>

**<<<<<<<>>>>>>**

மாநில அரசுகளுக்கான வரிப் பகிர்வாக, கூடுதல் தவணையாக 86 ஆயிரத்து 735 கோடி ரூபாயை விடுவிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

முதலீட்டு செலவினங்களை அதிகரிக்கவும், வளர்ச்சிப்பணிகளை விரைவுப்படுத்துவதற்கும் ஏதுவாக இந்த கூடுதல் தவணை விடுவிக்கப்படுவதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

கூட்டாட்சி தத்துவத்திற்கு வலுசேர்க்கும் வகையிலும், வளர்ச்சியடைந்த இந்தியாவை உருவாக்க வேண்டும் என்ற நோக்கிலும், இந்த கூடுதல் தவணைத்தொகை விடுவிக்கப்படுவதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கூடுதல் தவணைத்தொகை நாளை மறுநாள் விடுவிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வழக்கமான வரிப்பகிர்வுத்தொகை 10-ஆம் தேதி விடுவிக்கப்படும் என்றும் அந்த செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

<<<<<<<<>>>>>>

வேளாண் துறையின் வளர்ச்சிக்கு மேலும் உத்வேகம் அளிப்பதற்கான சீர்திருத்த நடவடிக்கைள் மேற்கொள்ளப்படும் என்று மத்திய வேளாண்துறை அமைச்சர் திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறியுள்ளார்.

ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற வேளாண் வளர்ச்சிக்கான பிரச்சார இயக்கத்தில் பங்கேற்று அவர் பேசினார்.

விவசாயிகள் நலன்களை பாதுகாப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மத்திய அரசு மேற்கொள்ளும் என்று அவர் கூறினர்.

வேளாண் ஆராய்ச்சியின் பலன்கள் விவசாயிகளை சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் இந்த இயக்கம் நாடு முழுவதும் நடத்தப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்த இயக்கத்தின்கீழ் விஞ்ஞானிகள் கிராமங்களுக்கு பயணம் மேற்கொண்டு விவசாயிகளை நேரடியாக சந்தித்து, புதிய தொழில்நுட்பங்களின் பயன்பாடு குறித்து எடுத்துரைக்க உள்ளதாக திரு சிவ்ராஜ் சிங் சௌகான் கூறினார்.

<<<<<<<<>>>>>>

தங்க நகைக்கடன் தொடர்பான ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டுதல்களில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என்ற மக்களின் கோரிக்கையை மத்திய அரசு உடனடியாக நிறைவேற்றியுள்ளதாக தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

சமூக வலைதளத்தில் இக்கருத்தை பதிவு செய்துள்ள அவர், 2 லட்சத்திற்கும் குறைவான தங்க நகைக்கடன்களுக்கு ரிசரிவ் வங்கியின் விதிமுறைகளிலிருந்து விலக்கு அளிக்க முடிவு செய்துள்ளது வரவேற்கத்தக்கது என்று தெரிவித்துள்ளார்.

இதன்மூலம், மக்களின் எண்ணங்களை பூர்த்தி செய்யும் வகையில் பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது என்பது உறுதி செய்யப்பட்டுள்ளதாக அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

இதற்காக தமிழக மக்களின் சார்பில் மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமனுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாகவும் திரு எல். முருகன் கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

பாதுகாப்பு தளவாடங்கள் ஏற்றுமதி தொடர்ந்து அதிகரித்து வருவதாக பாதுகாப்புத்துறை செயலர் திரு ராஜேஷ் குமார் சிங் கூறியுள்ளார்.

புதுதில்லியில் பாதுகாப்புத்துறை தொடர்பான உச்சிமாநாட்டில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

சுயசார்பு இந்தியா இயக்கத்திற்கு வலுசேர்க்கும் வகையில், உள்நாட்டிலேயே பாதுகாப்பு தளவாடங்களை உற்பத்தி செய்வதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டு வந்ததன் காரணமாக ஏற்றுமதி அதிகரித்து வருவதாக அவர் தெரிவித்தார்.

இதன்காரணமாக, பாதுகாப்பு தளவாடங்களை ஏற்றுமதி செய்யும் 25 முன்னணி நாடுகளில் இந்தியாவும் இடம்பெற்றிருப்பதாக அவர் கூறினார்.

பாதுகாப்பு தளவாட உற்பத்தியை பொறுத்தவரை தனியார் துறையினர் ஆராய்ச்சிப்பணிகளிலும் கூடுதலாக ஈடுபடவேண்டியதன் அவசியத்தை திரு ராஜேஷ் குமார் சிங் வலியுறுத்தினார்.

<<<<<<<>>>>>>

பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பை மேலும் வலுப்படுத்துவதென இந்தியாவும் – பிரேசிலும் முடிவு செய்துள்ளன.

இருநாடுகளின் பாதுகாப்புத்துறை உயரதிகாரிகள் பங்கேற்ற பேச்சுக்களில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இந்தியாவின் சார்பில் முப்படைகளின் தளபதி ஜென்ரல் அனில் சௌகான் இதில் பங்கேற்றார்.

சர்வதேச விவகாரங்கள் குறித்த அம்சங்கள் இந்த பேச்சுக்களில் இடம்பெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>

ஜம்மு காஷ்மீரையொட்டிய எல்லைப்பகுதியில் போர்கால பாதுகாப்பு ஒத்திகை இன்று நடைபெறவுள்ளது.

இதுகுறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்றும், வழக்கமான பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சிதான் என்றும் ஜம்மு காஷ்மீர் அரசு கூறியுள்ளது.

வான்வழி தாக்குதல் நடைபெறுவதை எச்சரிக்கும் வகையில் சைரன் ஒலிப்பது, ட்ரோன் தாக்குதல்களினால் பாதிப்பு ஏற்பட்டால் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்றவை இந்த பாதுகாப்பு ஒத்திகை நிகழ்ச்சியில் இடம்பெறவுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இன்று மாலை 5 மணியளவில் இந்த பாதுகாப்பு ஒத்திகை நடைபெறவுள்ளது.

இதற்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஜம்மு காஷ்மீர் அரசு கூறியுள்ளது.

குஜராத் மாநிலத்தையொட்டிய எல்லைப்பகுதிகளிலும் பாதுகாப்பு ஒத்திகை இன்று நடைபெறவுள்ளது.

**<<<<<<<>>>>>>**

தமிழகத்தில் கோவிட் பரவல் குறித்து பொதுமக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை என்று மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு மா. சுப்பிரமணியன் கூறியுள்ளார்.

இன்று சென்னையில் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

***Sound Byte - மா. சு – 65 Sec.)***

**<<<<<<<>>>>>>**

சர்வதேச புகையிலை ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதனையொட்டி, நாடு முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒருபகுதியாக தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் விழிப்புணர்வு பேரணிகள் நடைபெற்றன.

**<<<<<<<>>>>>>**

மிசோரமில் நேரிட்ட நிலச்சரிவில் வீடுகள் மற்றும் உணவு விடுதிகள் இடிந்ததில் சிலர் உயிரிழந்திருக்கக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

**Bazar Veng, Chandmary** பகுதிகளில் பெய்த கனமழை காரணமாக நிலச்சரிவு ஏற்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக அவர் மேலும் கூறுகிறார்.

தன்னார்வ தொண்டு நிறுவனங்களை சேர்ந்தவர்களும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<<>>>>>>

பெங்களூரு – காட்மாண்டு இடையே தினசரி விமான சேவை தொடங்கப்பட உள்ளதாக ஏர் இண்டியா நிறுவனம் அறிவித்துள்ளது.

நாளை முதல் இந்த சேவை தொடங்க உள்ளதாக அதன் நிர்வாக இயக்குனர் திரு **Aloke Singh** கூறியுள்ளார்.

இதற்கான முன்பதிவு தொடங்கியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய வழித்தடங்களில் விமான சேவை தொடங்குவது குறித்து ஏர் இண்டியா நிறுவனம் ஆலோசித்து வருவதாகவும் திரு **Aloke Singh** கூறியுள்ளார்.

<<<<<<<>>>>>>

இந்தியாவுடன் பாதுகாப்புத்துறையில் ஒத்துழைப்பு வலுப்படுத்தப்பட்டு வருவதாக அமெரிக்க பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு **Pete Hegseth** கூறியுள்ளார்.

சிங்கப்பூரில் நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், பாதுகாப்புப்படைகளுக்கு இடையேயான கூட்டுப்பயிற்சி இதில் ஒரு அம்சமாகும் என்றும் கூறினார்.

ஜப்பான், ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளுடனும் பாதுகாப்பு ஒத்துழைப்பை அமெரிக்கா வலுப்படுத்தி வருவதாகவும் திரு **Pete Hegseth** தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா ஒரு தங்கம், இரண்டு வெள்ளிப்பதக்கங்களை வென்றது.

தென்கொரியாவின் **Changwon**-வில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், ஆடவர் 25 மீட்டர் பிரிவில் **Amir Ahmad Bhat** தங்கப்பதக்கத்தையும், **Nihal Singh** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

மகளிர் பத்து மீட்டர் பிரிவில் மோனா அகர்வால் வெள்ளிப்பதக்கம் வென்றார்.

---------------

**Ulaanbaatar** ஓப்பன் மல்யுத்த போட்டியில் இந்தியா 4 தங்கம், ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

மகளிர் 53 கிலோ எடைப்பிரிவில் **Antim Panghal**–லும், 57 கிலோ எடைப்பிரிவில் **Neha Sangwan**–னும், 59 கிலோ எடைப்பிரிவில் **Muskan**-னும், 72 கிலோ எடைப்பிரிவில் **Harshita-**வும் தங்கப்பதக்கம் வென்றனர்.

50 கிலோ எடைப்பிரிவில் நீலம் வெண்கலப்பதக்கம் வென்றார்.

----

தாய்லாந்து ஓபன் குத்துச்சண்டை போட்டியில் இந்தியா, இரண்டு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

மகளிர் 57 கிலோ எடைப்பிரிவில் பிரியா-வும், 70 கிலோ எடைப்பிரிவில் **Sanah**–வும் வெண்கலப்பதக்கம் வென்றனர்.

--------------------

பிரெஞ்ச் ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் யுகி பாம்ரி – அமெரிக்காவின் **Robert Galloway** இணை காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளது.

-----------

இங்கிலாந்து லயன்ஸ் அணிக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் முதல் நாள் ஆட்ட நேர இறுதியில், இந்தியா **“A”** 3 விக்கெட் இழப்பிற்கு 409 ரன் எடுத்துள்ளது.

**<<<<<<<>>>>>>**